**மாத்தறை பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாத்தறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிகளின் பெறுமதி ரூபா 22,398,100 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவினச் செலவுகள் ரூபா 105,979 தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவிலும் சபைக்குச் சொந்தமான ரூபா 2,291,507 தொகை பெறுமதியான 03 காணித் துண்டுகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான கனத்தகொட தகனசாலையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,896,966 இற்கான செலவு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது சபையில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளமற்ற விடுமுறை தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 225,501 இற்கான தொகை | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய வருமானம் ஒன்று என காட்டப்படாமல் செலுத்தப்படாத சம்பள கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய செலவு என கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது ரூபா 172,628 தொகை மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது தீயகஹ மேற்கு வலுச் சக்தி பாதையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 478,216 இற்காக நிர்மாண வேலைக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நிலையான சொத்துக்களின் தன்மை அல்லாத ரூபா 431,466 தொகை பெறுமதியான 26 பொருட் பதிவேட்டு விடயங்கள், இயந்திரங்களும் உபகரணங்களும் தளபாடங்களும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 55,051,901 தொகைக்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிக் கணக்கில் காட்டப்பட்டுள்ள மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 1,108,449 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் அட்டவணைகள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 111,236,456 தொகைக்கான 24 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாமல் இருந்தது. | தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 7,180,069 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 26,218,678 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் வங்கியில் பேணப்பட்டு வருகின்ற நிர்மாண வேலை நடைமுறைக் கணக்கில் பல வருடமாகக் காணப்படும் ரூபா 5,000,000 தொகை முறையான முதலீட்டொன்றில் ஈடுபடுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதனை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைப்பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 9,126,000 | 5,031,253 | 4,912,719 | 9,319,424 | 8,136,000 | 13,254,550 | 12,241,359 | 9,200,890 |
| ii. | வாடகை | 4,880,100 | 1,936,974 | 2,173,620 | 612,400 | 3,390,100 | 2,074,093 | 1,881,140 | 849,046 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,117,100 | 1,410,800 | 1,466,484 | 161,800 | 3,671,950 | 1,340,384 | 3,045,673 | 217,484 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 7,698,000 | 3,015,369 | 3,292,893 | 6,599,252 | 10,694,000 | 13,173,487 | 8,199,334 | 6,876,776 |
| | மொத்தம் | 25,821,200 | 11,394,396 | 11,845,716 | 16,692,876 | 25,892,050 | 29,842,514 | 25,367,506 | 17,144,196 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் வரி மீதி ரூபா 9,200,890 தொகையாக காணப்பட்டதுடன், 5,209 வீதவரி அலகுகளுக்கு உரிய சிட்டையிடல் ரூபா 5,031,253 தொகையுடன் ரூபா 14,232,143 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,912,719 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 9,319,424 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான கடை வாடகை செலுத்தும் 21 கடையறைகள் காணப்பட்டதுடன், அந்த கடையறைகளில் 11 கடையறைகளில் இருந்து ரூபா 399,895 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 217,484 தொகையாகக் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 161,800 தொகையாக இருந்தது. | நிலுவை தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏனைய நிலுவைகள் ரூபா 6,599,252 தொகையாக இருந்தது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,386,848 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீதி இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஆண்டின் போது கிடைக்கும் என மதிப்பீடு செய்யப்பட்ட தொகையாகும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1978 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126(viii) பிரிவின் பிரகாரம் நகர்சாராத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி பிரமாணங்களில் அடங்கியுள்ள துணை விதிகளை சட்ட ஆக்கஞ் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணை விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சட்டத்தின் பிரகாரம் துணை விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 82 (1) ஏற்பாடுகளை பயன்படுத்தி 2022 ஜூன் 03 திகதி சபையினால் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு, சபை நிதியத்தில் இருந்து ரூபா 172,537 தொகை செலவிடப்பட்டு தனியார் காணி ஒன்றில் வடிகால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதில் பாதி அளவு தனித் தரப்பினர் ஒருவரிடம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. சபையினால் சிக்கல் தொடர்பாக மாற்றுத் தீர்வுகள் எடுக்க நடவடிக்கை எடுக்காமையினால் அடுத்த தரப்பினரால் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த நிர்மாண வேலை தொடர்பாக ஒரு தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக நீதிசார் நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மாத்தறை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களுக்கு வீட்டுத் தோட்ட பயிர்செய்கைக்காக பயிர்கள் வினியோக பதிவேட்டின் படி கொள்வனவு செய்யப்பட்ட கன்றுகளில் ரூபா 129,383 தொகை பெறுமதியான 7,514 கன்றுகள் மீதியாகக் காணப்பட்டது என கணக்காய்வில் | அடுத்த செயற்திட்டங்களின் போது இவ்வாறான சேதங்களின் சதவீதத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சேதங்கள் குறையக் கூடிய விதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த கன்றுகள் பௌதீக ரீதியாக பரிசோதனை செய்வதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | மின் சக்தி மற்றும் வலுச் சக்தி செயலாளரின் PR/01/01 இலக்கங் கொண்ட மற்றும் 2010 ஆகஸ்ட் 17 திகதிய வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 236,400 இற்கான செலவு ஒன்று மின்சார சபையில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | மின்சார சபையிடம் வேண்டப்பட்டுள்ளது என. | மீளளிப்பு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான பாதைகளில் மூன்றாம் தரப்பினரினால் நீர் குழாய் விரித்தலின் போது சேதப்படுத்தப்பட்ட பாதைகளை மறுசீரமைப்பதற்காக 2018 ஆண்டு முதல் கிடைத்திருந்த ரூபா 1,465,913 தொகை குறிப்பிட்ட கருமத்தை உரிய விதத்தில் நிறைவேற்றிக் கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்புக்களில் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளது என. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் 04 நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் சபையினால் இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய இலக்கம் 2235/54 கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ரூபா 336,110 இற்கான கட்டணம் அறவீடு செய்து அதனை சட்டரீதியாக்குவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பொது விளையாட்டுத் திடல்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தல்பாவில குருந்துவத்த விளையாட்டுத் திடலின் அபிவிருத்தி செய்யும் I ஆம் கட்டத்தின் கீழ் ஒப்பந்த சங்கத்திற்கு ரூபா 1,213,968 செலுத்தியிருந்ததுடன், பில் பத்திரத்தில் 1:1 மற்றும் 1:2 விடயங்களுக்காக தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரச சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த குறிப்பிட்ட ரேட்டினை பயன்படுத்தாமையால் ரூபா 236,567 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | விடயங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய ரேட்டுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 கிராமியப் பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தனியார் பாதை ஒன்றிற்கு துண்டுக் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்வதற்காக சபையினால் முறைசாரா விதமாக ரூபா 253,069 செலவொன்று மேற்கொண்டிருந்தது. | விடயங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஒப்பந்தங்கள் முறைசார் விதமாக செயற்படுத்தப்பட வேண்டும். |